www.freetnbooks.com

| 6 - STD | இரண்டாம் பருவ நிறைவுத் தொகுத்தறித் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 60 |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** 10 x 1 = 10

1. ஆரியர்கள் முதலில் ________ பகுதியில் குடியமர்ந்தனர்.
   அ) பஞ்சாப் ஆ) கங்கைச் சமவெளியின் மத்தியப் பகுதி
   இ) காஷ்மீர் ஈ) வடகிழக்கு
2. நம் நாட்டின் தேசிய குறிக்கோள் "வாய்மையே வெல்லும்" ________-லிருந்து எடுக்கப்பட்டது.
   அ) பிராமணம் ஆ) ஆரண்யம் இ) வேதம் ஈ) உபநிடதம்
3. சமணத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் இருந்தனர்?
   அ) 23 ஆ) 24 இ) 25 ஈ) 26
4. புத்தர் தனது முதல் போதனை உரையை எங்கு நிகழ்த்தினார்?
   அ) லும்பினி ஆ) சாரநாத் இ) தட்சசீலம் ஈ) புத்தகயா
5. செல்யூகஸ் நிகேட்டரின் தூதுவர் யார்?
   அ) டாலமி ஆ) கௌடில்யர் இ) செர்சக்ஸ் ஈ) மெகஸ்தனிஸ்
6. புதுப்பிக்கக் கூடிய வளம் எது?
   அ) சூரியன் ஆ) டீசல் இ) பெட்ரோல் ஈ) நிலக்கரி
7. 'ஆனந்த மடம்' என்னும் புகழ்பெற்ற நாவலை எழுதியவர் யார்?
   அ) அமிதார் கோஷ் ஆ) இரவீந்திரநாத் தாகூர்
   இ) பங்கிம் சந்திர சட்டர்ஜி ஈ) ஜவஹர்லால் நேரு
8. விடுதலைக்குப் பிறகு ஏற்றப்பட்ட முதல் தேசியக் கொடி எங்குள்ளது?
   அ) புனித ஜார்ஜ் கோட்டை அருங்காட்சியகம் ஆ) தேசிய அருங்காட்சியகம், புதுதில்லி
   இ) சாரநாத் அருங்காட்சியகம் ஈ) கொல்கத்தா அருங்காட்சியகம்
9. அரசியலமைப்புத் தினம் கொண்டாடப்படும் நாள் எது?
   அ) ஜனவரி 26 ஆ) ஆகஸ்ட் 15 இ) நவம்பர் 26 ஈ) டிசம்பர் 9
10. தேன் சேகரித்தல் என்பது எந்த் நிலைத் தொழில்? ____
    அ) முதல் நிலைத் தொழில் ஆ) இரண்டாம் நிலைத் தொழில்
    இ) மூன்றாம் நிலைத் தொழில் ஈ) நான்காம் நிலைத் தொழில்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** 7 x 1 = 7

11. ஆதிச்சநல்லூர் ________ மாவட்டத்தில் அமைந்துள்ளது.
12. சமணத்தின் முதல் தீர்த்தங்கரர் ________ ஆவார்.
13. மௌரியப் பேரரசைத் தோற்றுவித்தவர் ________.
14. கரும்பிலிருந்து ________ தயாரிக்கப்படுகிறது.
15. நம் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள் ________.
16. தமிழ்நாட்டில் ________ சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர்.
17. இயற்கை வளங்களைச் சேகரித்தல் ________ எனப்படுகிறது.

**III. பொருத்துக** 5 x 1 = 5

| | | | |
|---|---|---|---|
| 18. | பிட்சுக்கள் | - | பரவலாகக் காணப்படும் வளங்கள் |
| 19. | மெகஸ்தனிஸ் | - | ஏப்ரல் 1 |
| 20. | உலகளாவிய வளங்கள் | - | முதல் நிலைத் தொழில் |
| 21. | அனைவருக்கும் கல்வி உரிமை | - | இண்டிகா |
| 22. | கால்நடைகள் வளர்ப்பு | - | துறவிகள் |



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

**IV. சரியா? தவறா?** 5 x 1 = 5

23. கருப்பு மற்றும் சிவப்பு மட்பாண்டங்கள் பெருங்கற்காலத்தின் சிறப்பியல்புகள் ஆகும்.
24. அசோகர் பௌத்த சமயத்தைப் பின்பற்றினார்.
25. தேவனாம்பிரியர் என்னும் பட்டம் சந்திரகுப்த மௌரியருக்கு வழங்கப்பட்டது.
26. பையம்பள்ளியில் இரும்பு உருக்கப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.
27. நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.

**V. கூற்று காரணத்துடன் ஒப்பிடுக (சரியான விடையைத் தேர்ந்தெடு)** 3 x 1 = 3

28. **கூற்று:** வேதகாலம் குறித்து கற்க அதிக அளவு இலக்கியச் சான்றுகள் மற்றும் பயன்பாட்டுப் பொருள் சான்றுகள் கிடைத்துள்ளன.

**காரணம்:** நான்கு வேதங்கள், பிராமணங்கள், ஆரண்யகங்கள் மற்றும் உபநிடதங்களை உள்ளடக்கியதே சுருதிகளாகும்.

அ) கூற்றும் காரணம் சரியானவை, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமே

ஆ) கூற்றும் காரணமும் சரியானவை, காரணம் கூற்றிற்கான சரியான விளக்கமல்ல

இ) கூற்று சரி, காரணம் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

29. **கூற்று:** ஜாதகங்கள் புகழ்பெற்ற கதைகளாகும்.

**காரணம்:** அஜந்தா குகையின் சுவர்களிலும் மேற்கூரையிலும் வரையப்பட்டுள்ள ஓவியங்கள் ஜாதகக் கதைகளைச் சித்தரிக்கின்றன.

அ) கூற்றும் அதற்கான காரணமும் சரி ஆ) கூற்று தவறு

இ) கூற்று சரி, ஆனால் அதற்ான காரணம் தவறு

ஈ) கூற்றும் அதற்கான காரணம் ஆகிய இரண்டும் தவறு

30. சரியான இணையைத் தேர்ந்தெடுக்கவும்:

i) செப்டம்பர் 27 - சமூக நீதி நாள்

ii) நவம்பர் 14 - குழந்தைகள் நாள்

iii) ஏப்ரல் 12 - சமத்துவ நாள்

iv) அக்டோபர் 15 - கல்வி வளர்ச்சி நாள்

**VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளி (ஏதேனும் 5)** 5 x 2 = 10

31. நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
32. சமணத்தின் மூன்று ரத்தினங்கள் எவை?
33. மகத அரச வம்சங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
34. நாட்டு வளம் மற்றும் பன்னாட்டு வளம் - ஒப்பிடுக.
35. நமது தேசியக் கொடியில் உள்ள வண்ணங்கள் எவற்றைக் குறிக்கின்றன?
36. அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
37. நீர்நிலைகளுக்கு அருகில் குடியிருப்புகள் வளர்ச்சியடைவதற்கான காரணம் என்ன?

**VII. விரிவான விடையளி (ஏதேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும்)** 3 x 5 = 15

38. கொடுமணலிலுள்ள தொல்லியல் ஆய்விடம் குறித்து சுருக்கமாக எழுதுக.
39. பௌத்தத்தின் எட்டு நெறிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
40. வளங்களைப் பாதுகாப்பது எப்படி?
41. தேசிய கீதம் பாடும்போது பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் யாவை?
42. நகரங்களின் அம்சங்களாக நீ அறிவன யாவை?

**VIII. இந்தியா ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்** 5 x 1 = 5

1. வங்காள விரிகுடா 2. இந்தியப் பெருங்கடல் 3. டெல்லி
4. பாடலியுத்திரம் 5. உஜ்ஜைனி



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam